# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2021/30 - 2017 මැයි මස 31 වැනි බදාදා - 2017.05.31

2021/30 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக் கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மினிபே பிரதேச செயலாளர் பிரிவில் கந்த பஹால கோரலை யில் சிறிய பிரிவில், 927 - 1 குருலுபொத கிராம அலுவலர் பிரிவில் குருலுபொத கிராமத்தில் அமைந் துள்ள நில அளவையாளர் மா அதிபதியினால் அளவீடு செய்து தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபடத்தின் இல. 299 மேலதிக இல. 7, பத்திர இல. 7 மற்றும் 2014.10.07 ஆந் திகதியுடைய பிரதான வரைபடத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் அளவுடைய காணித் துண்டின் எல்லைகள்.

**1. துண்டு இலக்கம் 887 - மொரகெடிய வத்த - விஸ்தீரணம்: 0.0078 ஹெக்டயார்.**

வடக்கு: துண்டு இல. 872 மற்றும் இல. 95; கிழக்கு மற்றும் தெற்கு: துண்டு இல. 95; மேற்கு: துண்டு இல. 95 மற்றும் 872.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு மினிபே பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தை களின் தன்மையையும் குறித்த காணியை எடுத்த தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கை களின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படு கின்றனர்.

எஸ். எம். சீ. குணரத்ன,<br>
பிரதேச செயலாளர்,<br>
மினிபே.

பிரதேச செயலகம்,<br>
மினிபே,<br>
2017, வைகாசி 29.

6 - 490